2025 அக்டோபர் மாதம் 28 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 154/2020

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 – ஆம் தேதி செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – சந்தோஷ்குமார் |
| தந்தை பெயர்: | மனோகரன் |
| ஊர்: | கோம்பை |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கிளை மேலாளர், கரூர் வைசியா வங்கி, கோம்பை |
| வயது : | 43 |

28.10.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 15.10.2013 ம் தேதியிட்டு இவ்வழக்கின் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு கடன் வேண்டி எழுதிக்கொடுத்த விண்ணப்பம் அசல் – **வா.சா.ஆ.1** |
| 2. | 15.10.2013 ம் தேதியிட்டு இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கடன் சம்பந்தமாக எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு அசல் – **வா.சா.ஆ.2** |

| | |
|---|---|
| 3. | 15.10.2013 ம் தேதியிட்டு இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கடன் சம்பந்தமாக எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் அசல் – **வா.சா.ஆ.3** |
| 4. | 15.10.2013 ம் தேதியிட்டு வாதி வங்கி கடனை அனுமதித்து வழங்கிய அனுமதி கடிதம் அசல் – **வா.சா.ஆ.4** |
| 5. | 15.10.2013 ம் தேதியிட்டு இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கடன் எழுதிக்கொடுத்த கடன் தொடர்ச்சி கடிதம் (Letter of Continuity) அசல் – **வா.சா.ஆ.5** |
| 6. | 15.10.2013 ம் தேதியிட்டு இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கடன் சம்பந்தமாக எழுதிக்கொடுத்த கடன் பொறுப்புறுதி ஆவணம் அசல் – **வா.சா.ஆ.6** |
| 7. | 15.10.2013 ம் தேதியிட்டு இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கடன் சம்பந்தமாக எழுதிக்கொடுத்த கடன் பொறுப்புறுதி சம்மத கடிதம் அசல் – **வா.சா.ஆ.7** |
| 8. | 11.10.2013 ம் தேதியிட்டு இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு சொத்துக்களை அடமானப்படுத்தி எழுதிக்கொடுத்த பதிவு அடமான ஆவணம் அசல் (ஆவண எண்.4425/2013) – **வா.சா.ஆ.8** |
| 9. | 13.03.2009 ம் தேதியிட்டு இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதிக்கு லட்சுமி என்பவர் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் அசல் (ஆவண எண்.1216/2009) – **வா.சா.ஆ.9** |
| 10. | 12.10.2016, 03.10.2019 ஆகிய தேதிகளிட்டு இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்புதல் கடிதங்கள் அசல் – **வா.சா.ஆ.10** |
| 11. | 07.09.2020 ம் தேதியிட்டு இவ்வழக்கின் வாதி வங்கி இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல், இரண்டு அசல் அஞ்சலக இரசீதுகளுடன் – **வா.சா.ஆ.11** |
| 12. | வாதி வங்கி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 2 ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை மற்றும் 1 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சலக உறை அசல் – **வா.சா.ஆ.12** |
| 13. | இவ்வழக்கின் பிரதிவாதிகள் இவ்வழக்கின் வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையை காட்டக்கூடிய கணக்குப் பட்டியல் கணினி நகல் – **வா.சா.ஆ.13** |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**:– பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 28.10.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.28 18:27:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
28.10.2025.